ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1652/65 - 2010 මැයි 07 වැනි සිකුරාදා - 2010.05.07
*1652/65 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி, மக்கள் குடியிருப்பு, இராணுவ நலன்புரி அமைச்சர் ஜோன்ஸ்டன் சேவியர் பிரணாந்து ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், பத்தேகம கிராமத்தில் அமைந்துள்ளதும், காலி மாவட்ட நில அளவை அதிகாரியால் தயாரிக்கப்பட்ட ஜீஏ/பிடிடி/09/211 ஆம் இலக்கமும் 2009.08.17 ஆந் திகதியும் கொண்ட சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.3466 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஹில்குரோப்ட் வத்த எனும் காணித்துண்டின் எல்லைகள் :

வடக்கு : தேசிய நீர்விநியோக சபை உரிமைகோரும் ஹில்குரோப்ட் வத்தயும் குணபால வீரதுங்க அவர்களும் பிறரும் உரிமைகோரும் ஹில்குரோப்ட் வத்தயும் ; கிழக்கு : பாதையும் குணபால வீரதுங்க அவர்களும் பிறரும் உரிமை கோரும் ஹில்குரோப்ட் வத்தயும் ; தெற்கு : பாதையும் தேசிய நீர்விநியோக சபை உரிமைகோரும் ஹில்குரோப்ட் வத்தயும் ; மேற்கு : தேசிய நீர்விநியோக சபை உரிமைகோரும் ஹில்குரோப்ட் வத்த.

ஜோன்ஸ்டன் சேவியர் பிரணாந்து,
காணி, காணி அபிவிருத்தி, மக்கள் குடியிருப்பு,
இராணுவ நலன்புரி அமைச்சர்.

குறிப்பு இல. : எல்டீ/05/2007/டபிள்யூஎஸ்/325.
"கமநல மண்டபம்",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2010.02.23.

05 - 579

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.